**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 157 / 2019**

**வா.சா.1 – பழனியம்மாள்** **28.07.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

5 சொத்துக்களுக்கு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் 375, 373, 373/8, 173/12 ஆகும். தாவா சொத்துக்களுக்கு என்னுடைய பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சர்க்கார் மனை நத்தம் என்று தான் உள்ளது. எனது பெயரில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அனுபவம் செய்ததற்கான வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 373/12க்கு கிழக்கு பக்கம் அரசு கால்நடை மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். நான் பூர்வீக சொத்து என்று வருவாய் துறையில் மனு கொடுத்துள்ளேன். வருவாய் துறை ஆவணங்கள் எனது பெயரல் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஜோதி என்பவரை எனக்கு தெரியும் அவர் எனது தம்பி மனைவி ஆவார். கார்த்திக்ராஜா என்பவரை எனக்கு தெரியும் அவர் எனது தம்பி மகன். சர்வே எண் 373/8ல் ஜோதி என்பவர் மகன் கார்த்திக்ராஜா குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். கார்த்திக்ராஜா குடியிருக்கும் வீட்டின் அருகில்

காலிமனையிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலியிடத்தில் பஞ்சாயத்து கட்டிடம் கட்டியபோதும் நான் 2019ல் பிரச்சனை செய்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்பு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 373/12ல் வட்டகிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறு பஞ்சாயத்து கிணறு என்றால் சரியல்ல. அந்த கிணற்றிற்கு மின் இணைப்பு கிடையாது. 3ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த இளைய சகோதரி, 4 பிரதிவாதி அவரது கணவர். 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்களை அபகரிப்பதற்காக 3. 4 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் 3, 4 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லாததால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணத்தில் எனது பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையதல்ல அந்த ஆவணங்கள் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ள நபர்களின் பெயரில் மூல ஆவணங்களோ வருவாய்

துறை ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை